**விடுமுறைக்கால செயலட்டை–2020 – தரம் 11**

**Holiday Worksheet – 2020 – Grade 11**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II | மூன்று மணித்தியாலம் **Three Hours** |

சுட்டெண் **Index No**

**தமிழ் மொழியும் இலக்கியமும்**

பகுதி I

பொருத்தமான விடையினை தெரிவு செய்க

01. இறைவன் ஞான தேசிகனாகக் காட்சி கொடுத்தார் இங்கே தேசிகன் என்பதன் பொருள்
    1. அவதாரம் 2. ஆசிரியர் 3. பழம் 4. வரம்

02. ‘‘பொதும்பர்மிசை சூழ் மதுகர இசை’’ இங்கு மதுகரம் என்பது
    1. யாழ் 2. பறவை 3. தேனீ 4. மீரலை

03. பாட்டாளி என்பதன் எதிர்ப்பதம்
    1. முதலாளி 2. கூட்டாளி 3. பொருளாளி 4. அவபட்டாளி

04. சத்துரு என்பதன் எதிர்ப்பதம்
    1. அசத்துரு 2. சித்துரு 3. மித்துரு 4. சற்குரு

05. புனிதன் என்பதன் எதிர்பாற் சொல்
    1. புனதிள் 2. புனிதை 3. புனிதா 4. புனிதாட்டி

06. மிருகங்களை கட்டி வைப்பதற்கு உபயோகிக்கப்படும் தூண்
    1. கட்டுத்தறி 2. தும்பு 3. கைத்தறி 4. ஆவுரஞ்சிக்கல்

07. இரகசியமாக போர்ப்பயிற்சி பெற்று பதுங்கியிருந்து தாக்கும் படைப்பிரிவு
    1. அதிரடிப்படை 2. கரந்தடிப்படை 3. மரபுப்படை 4. கூழைப்படை

08. மழைக்குணம் இல்லாத போது உண்டாகும் இடிமுழக்கம்
    1. தூற்றிடி 2. பொய்யிடி 3. மெல்லிடி 4. வெள்ளிடி

09. சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்
    1. ஒற்றி 2. நிந்தகம் 3. கப்பம் 4. செஞ்சோறு

10. சம்பியன் என்பதற்குரிய கலைச் சொல்
    1. வீரர் 2. வாகையர் 3. போட்டியாளர் 4. நிபுணர்

11. சுதாகரன், சுகிர்தன், கிருபாகரன், பூபாலன், அமுதன், தனபாலன் போன்ற பெயர்களால் குறிக்கப்படுபவர்
    1. பிள்ளையார் 2. புத்தர் 3. யேசு பிரான் 4. முருகன்

12. ‘‘முரலும்’’ என்ற தொனிக்குரியது
    1. வண்டு 2. முயல் 3. காண்டாமிருகம் 4. கொக்கு

13. புலியின் இளமைப் பெயராக அமைவது
    1. போதகம் 2. பறள் 3. பிணா 4. குஞ்சு

14. ஆமையின் ஆணாக அமைவது
    1. கடுவன்    2. ஆகுதன்    3. பார்ப்பு    4. அலவன்

15. அமளி செய்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்
    1. முடிவுகட்டுதல்    2. குழப்பம் விளைவித்தல்
    3. புதுமை உருவாக்கல்    4. அலட்சியம் செய்தல்

16. விரைவையும் சுறுசுறுப்பையும் விளக்கும் மரபுத்தொடர்
    1. ஆலாப பறத்தல்    2. சிறகுகட்டிப்பறத்தல்    3. மல்லுக்கட்டுதல்    4. சிங்கியடித்தல்

17. பின்வருவனவற்றுள் போர்த்துக்கீச மொழிச் சொல்லாக அமைவது
    1. அலுமாரி    2. சந்தடி    3. போத்தல்    4. பரட்டை

18. செயலுக்கு ஏற்றபடியே பயன் விளையும் என்ற கருத்தைத் தரும் பழமொழி
    1. விதைக்கின்ற காலத்தில் தூங்கிவிட்டு அறுவடையை நினைக்கலாமா
    2. மேய்கின்ற மாட்டினை நக்குகின்ற மாடு கெடுக்கும்
    3. முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா
    4. மாடு கிழமானாலும் பாலின் சுவை போகுமா

19. அச்ச உணர்வினை வெளிப்படுத்தும் உவமைத் தொடர்
    1. ஒளியைக்கண்ட இருள்போல
    2. எரிகின்ற நெருப்பிலே எண்ணெய் ஊற்றினால் போல
    3. பேய்க்குப் பேன் பார்த்தது போல
    4. கருடனைக்கண்ட பாம்பு போல

20. "குண்டக்க மண்டக்க" என்ற இணை மொழியின் பொருளைத் தரும் பிறிதொரு இணைமொழி
    1. குண்டும் குழியும்    2. ஏச்சுப்பேச்சு    3. இடக்குமுடக்க    4. கணக்குவழக்கு

21. அகச்சுட்டாக அமைவது
    1. அம்மா    2. அவர்    3. இறங்கு    4. உலகம்

22. பழந்தமிழில் மட்டுமே மொழி இறுதியில் அமைந்த எழுத்து
    1. ன்    2. க்    3. ந்    4. ழ்

23. செயப்பாட்டுவினை விகுதியாக அமைவது
    1. இரு    2. இயர்    3. வி    4. உண்

24. வினைத்தொகையாக அமையக்கூடியது
    1. வெட்டுக்கத்தி    2. நலன்புரிச்சங்கம்    3. மடிக்கணணி    4. வரைபடம்

25. புணர்ச்சியால் வேறுபட்ட பொருளை தரக்கூடியது
    1. கொக்கு + பறந்தது    2. கத்தி + கொண்டு    3. நீர் + பெருக்கு    4. ஓடி + வா

26. உயிர்த்தொடர் குற்றியலுகரமாக அமைவது
    1. நாகு    2. பெய்து    3. நுங்கு    4. விறகு

27. பின்வருவனவற்றுள் மரூஉ வழக்காக அமைவது
    1. அருமருந்தன்ன    2. கொழும்பு    3. ஆடாதோடை    4. வாதநிவாரணி

28. வரகியாது என்பதில் உள்ள மாத்திரையின் அளவு
    1. 5    2. 6    3. 5½    4. 4½

29. ஈற்றயல் திரிதல் ஊடாக விளிவேற்றுமை பெற்றது.
    1. மகனே    2. உழவர்காள்    3. தம்பீ    4. தங்காய்

30. இதனால் + தான் என்பதனை புணர்த்தினால்
    1. இதனால் தான்    2. இதனால்த்தான்    3. இதனாற் தான்    4. இதனாற்றான்

பொருத்தமான முடிக்கும் பகுதியை தெரிக

31. புதிய கருத்தியல் வந்தாலன்றிநான் கவிதை
    1. எழுதுவேன்
    2. எழுதேன்
    3. எழுதவில்லை
    4. எழுதுவதின்று

32. ஓவியம் வரைவதற்கு தூரிகையும் வர்ணங்களும்
    1. தேவையானவை
    2. தேவையானது
    3. தேவை மிக்கது
    4. தேவைக்குரியது

33. பின்வருவனவற்றுள் சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்வரிசை
    1. ஏற்கெனவே, பிரச்சினை, வம்சாவளி
    2. ஏற்கனவே, பிரச்சினை, வம்சாவளி
    3. ஏற்கெனவே, பிரச்சனை, வம்சாவழி
    4. ஏற்கனவே, பிரச்சனை, வம்சாவழி

34. பின்வருவனவற்றுள் வழுவற்ற வாக்கியத்தை தெரிவு செய்க
    1. ஊரணி நீர் நிறைந்திருந்தது
    2. சிறுவன் முடிவெட்டச் சென்றான்
    3. மாடு வைக்கலைத் தின்று முடித்தது
    4. நத்தைகள் வேகமாக நகரா

35. நான் கொழும்புக்கு போயிருந்தேன் உமது வீட்டிற்கு வரமுடியவில்லை. மேற்படி இரு வாக்கியங்களையும் ஒழுங்கில் இணைப்பதற்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்
    1. எனினும்
    2. ஏனெனில்
    3. ஆகையால்
    4. ஆனாலும்

36. அகர வரிசையில் அமையாத தொகுதி
    1. சட்டி, சாடி, சீயம், சிட்டு
    2. கிளி, கீரை, கூடை, கொடை
    3. தாகம், தீமை, துன்பம், தெய்வம்
    4. நாகம், நீட்சி, நெய்தல், நைத்தான்

பின்வரும் பாடலைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

சீர்பெறு தாமரைச் சிறப்புறு இலை தனில்
நீர்த்துளி ஒட்டிடாப் புதிரது புரிந்ததா?
தேர்க்குவாய் காரணம் முளரியின் இலைதனில்
போர்த்திடு மேற்படை நனோநிலை முகடுகள்

பல்லியும் மேற்புறச்சுவரிலே நகருது
பல்லியின் காலிடை சுவரிடை கவர்விசை
கொள்ளளும் பல்லியின் நிறையிலும் அதிகமாய்
நல்கிடும் முஞ்சமாய் பதம்படர் நனோநிலை

37. பாடலின் தாமரை குறித்து வெளிப்படும் ஒத்த சொல்
    1. காரணம்
    2. முளரி
    3. மேற்படை
    4. முகடு

38. பாடலில் இடம்பெறும் வினைத்தொகை
    1. சீர் பெறு
    2. நீர்த்துளி
    3. கவர்விசை
    4. பதம்படர்

39. பாடலில் வெளிப்படும் தொழில்நுட்பம்
    1. நீர்த்தொழில் நுட்பம்
    2. கவர்விசை தொழில் நுட்பம்
    3. நனோத்தொழில் நுட்பம்
    4. கவிதைத் தொழில் நுட்பம்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையை தெரிக.
    அ. இன்றும் பலர் அவரது உளவியல் நோக்கினை பன்பற்றி கதை புனைகின்றனர்.
    ஆ. அவரது கதைகளில் உளவியல் நோக்கே அடி நாதமாக அமைந்திருந்தது.
    இ. இப்பண்புகள் இல்லாமல் சிறந்த கதைகளை எழுதலாம் என அன்ரன் செக்காவ் நிரூபித்தார்.
    ஈ. தொடக்க கால சிறுகதைகளில் விடுப்பார்வம் வியப்பு முடிவு என்பன முக்கியமான பண்புகளாகக் கொள்ளப்பட்டன.
    உ. சிறுகதைகள் காலத்திற்கு காலம் பல்வேறு பட்ட பண்புகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.
    1. உஈஅஆஇ
    2. ஈஇஆஉஅ
    3. உஈஇஆஅ
    4. ஈஇஉஅஆ

(40 புள்ளிகள்)

## பகுதி II

**எல்லாவினாக்களுக்கும் விடை தருக**

01. i. பின்வரும் தொடரைச்சந்தி பிரித்தெழுதுக.
“ வரையெலாமாரமாரம் ”

ii. பின்வரும் தொடரின் எழுவாய் பயனிலையை இனம் காண்க
“ இசுமன் கண்டின் இதயக்கனியாய் வளர்ந்தாள் பாத்துமா வண்ணக்கிளி போல் ”

iii.“ வானக்கடலிடை வெண்ணிலாவே ” இதில் வந்துள்ள அணி யாது?

iv. ஆறு + ஐ என்பதை இருவேறு பொருள் தரும் வகையில் சேர்த்து எழுதுக?

v. பின்வரும் வாக்கியத்துக்கு பொருத்தமான நிறுத்தக்குறிகளை இட்டு மீண்டும் எழுதுக?
இந்தக் கொரோனா வைரஸ் அழியாதா என்றேன்

vi. கொரோனா வைரஸால் உலகமே முடங்கியுள்ளது. இங்கு ஆல் உருபு உணர்த்தும் பொருள் யாது?

vii. பின்வரும் வாக்கியத்தில் காணப்படும் திசைச்சொல் யாது?
“ நல்ல சினிமாவுக்கு சில அடிப்படை அளவுகோல்கள் உண்டு ”

viii. ரவி பாட கமலா ஆடினாள்.
இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற வினையெச்சத்தைத் தருக?

ix. “மக்கள் தேரை இழுத்தனர்” இச் செய்வினை வாக்கியத்தினை செயப்பாட்டுவினை வாக்கியமாக்குக.

x. ஒரு மனிதன் உலாவிக் கொண்டிருந்தான் இவ்வாக்கியத்தினை வழுநீக்கி எழுதுக.

(20 புள்ளிகள்)

02. நீர் பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாள 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.

i. இயற்கையோடு இணைந்த வாழ்வு என்பது இனிமையானது காட்டில் வாழ்ந்த மனிதன் மிகவும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்கையை நடாத்தினான். இயற்கைக்கு முரணான வாழ்க்கையை செயற்கையை நோக்கி வாழத்தலையப்பட்ட போதே தொற்றுநோய்களும் தொற்றாநோய்களும் ஏற்பட ஆரம்பமாகின. இந்நிலையில் இயற்கையை பேணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு விளக்கக்கட்டுரை வரைக.

ii. அண்மையில் நீர்கலந்துகொண்ட கல்விச்சுற்றுலாவின் போது தரிசித்த இடங்கள், கவின்மிகு காட்சிகள், சந்தித்த சமூகத்தவர்கள், அவர்களோடு பழகிப்பெற்ற அனுபவங்கள் முதலானவை உமது கல்விக்கும் பொது அறிவிற்கும் உதவுவனவாக அமைந்தன. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பதற்கான விவரணக் கட்டுரை.

iii. இன்றைய நவீனத்துவ உலகிற்கு பன்மொழிப்புலமை அவசியமானதாகும் எனக்கூறும் ஒருவருக்கும் அதனை மறுத்துரைக்கும் ஒருவருக்கும் இடையிலான உரையாடல்.

iv. தோல்விகளைச்சந்திக்காதவன் கைகளில் வெற்றி தவழ்வதில்லை ஆரம்பத்தில் தோல்விகளைச்சந்தித்து இறுதியில் வெற்றியின் இலக்கை அடைந்த ஒருவரின் வாழ்கையை வெளிப்படுத்தும் ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)

வாழ்க்கை என்பது ஊண், உடை, உறையுள் முதலிவற்றை தேடிப்பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல், தற்காப்புக்காக பற்பல கருவிகளை இயற்றிக்கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும் நாட்டமாகவும் அமையும். பொருளால்

அதாவது ஊண், உடை முதலியவைகளால் இன்பம் பெற முயன்று அலைந்து அலைந்து வாடிய பின் மக்கள் வாழ்க்கையின் இரண்டாம் படியினை எய்துவர். உண்ணும் உணவுக்கும் உடுக்கும் உடைக்கும் இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையில் சிக்குண்டு வருந்தும் மக்கள் இரண்டாடி படியினை எய்தார். கஞ்சிக்கவலை மிகுந்த நாட்டில் கலைக்கவலை எழாது. கடவுட் கவலையும் தோன்றாது. பசித்துன்பம் அலைக்கும் நாடு பண்பாடு எய்தாது. வேண்டிய உணவும் பெற்று உடையும் பெற்று இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படியினை எய்தும் தகுதி வாய்ந்தவர். தமிழ்ச்சான்றோர் ஊர்களை புகழத் தொடங்கிய போது மாட மாளிகைகளையும் பிறவும் பற்றி புகழ்ந்துரைத்தலில் ஊக்கம் கொள்ளாமல் “பசி என்பது அறியா ஊர்கள்” என்று புகழும் திறன் போற்றத்தக்கது. ஆதலின் வறுமையற்ற நாடே முன்னேற்றதிற்கு தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு என்னும் முதற் படியிலிருந்து கலைவாழ்வு என்னும் இரண்டாம் படிக்கு உயரவல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றி சிறிதும் பயன்படாது. இரண்டாம் நிலையுற்ற மக்கள் வயிற்றுக்கவலை அற்றவராய் புலன்களுக்கு சிறந்து விருந்து தேடி அவற்றின் வாயிலாக இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கினிய காட்சியாக ஓவியம், சிற்பம், நாடகம், முதலிய தேடுவார். செவிக்கினிய விருந்தாக இசை, காவியம், கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப்புலன்களும் ஏற்ற விருந்து விழைத்து தேடுவார். இந்நிலையில் கலைவளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும்

(10 புள்ளிகள்)

04. பின்வரும் பந்தியினை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வீரக்கற்பு வாய்ந்த கண்ணகியின் கதையால் ஓர் அரசியல் உண்மையும் விளங்குகின்றது. நெறி தவறிய அரசனை அறமே ஒக்கும். என்னும் உண்மையை பாண்டியன் வரலாறு காட்டுகின்றது. அரண்மனை சிலம்பை களவாடிய கள்வன் அகப்பட்டான் என்று பொற் கொல்லன் சொல்லிய சொல்லை ஆராய்ந்து பாராது உண்மையை விசாரித்து அறியாது அக்கள்வனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வருக என்று பணித்தான் பாண்டியன். அரசன் ஆணையால் தன் கணவன் இறந்தான் என்று அறிந்த கண்ணகி சீறி எழுந்தாள். “தீவேந்தன் தனைக்கண்டு இத்திறம் கேட்பேன்” என்று புறப்பட்டாள். கருங்கூந்தல் விரிந்து கிடக்க கண்கள் கண்ணீர் வடிக்க கையில் ஒற்றைச்சிலம்பேந்தி காவலன் முன்னே தோன்றினாள். கோவலனிடமிருந்த சிலம்பு அரண்மனைச்சிலம்பன்று. தன் சிலம்பே என பாண்டியன் திடுக்கிடப் பேசினாள் அந்நிலையில் மன்னவன் கை சோர்ந்து மெய்சோர்ந்தான்.

1. கண்ணகியின் கதை விளக்கும் அரசியல் உண்மை யாது?
2. கண்ணகியின் சீற்றத்திற்கு காரணம் என்ன?
3. பாண்டியனிடம் சென்ற கண்ணகியின் கோலத்தை விபரிக்குக?
4. பாண்டிய மன்னன் கைசோர்ந்து மெய் சோர்ந்தமைக்கான காரணம் என்ன?
5. கருங்கூந்தல் எவ்வகைத் தொகை?

(10 புள்ளிகள்)

5. இன்றைய கால கட்டத்தில் விவசாய உற்பத்தியூடாகவே ஒவ்வொரு நாடும் தன்னிறைவு அடைய வேண்டிய அவசியத்தில் உள்ளது. எமதுநாட்டை பொறுத்தவரை ஒவ்வொருவரும் வீட்டுத்தோட்டம் செய்தாலே தன்னிறைவை அடைந்துகொள்வதற்கு இலகு வழியாகும். வீட்டுத்தோட்டம் செய்வதால் ஏற்படும் பயன்களை வலியுறுத்தி பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் கடிதம் எழுதுக.

அல்லது

கொரோனா வைரஸ் தாக்கம் இன்று உலகையே புரட்டிப்போட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மக்கள் தப்புவதற்கான வழிவகைகளைத்தாங்கி சுகாதார பிரிவினரால் வெளியிடப்படும் துண்டுப்பிரசுரம் ஒன்று வரைக.

(15 புள்ளிகள்)